Regd No. M. 2475. FEBRUARY, 1931. Vol. VI—No. 2.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதராஸ்.

OF THE
1st MAY 10..

பொருளடக்கம்.

| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்து ஸ்டாண்டிங் ஆர்டரின் சம்பந்தமாக சில யோசனைகள். | 17 |
| 2. | குறிப்புகள். | 20 |
| 3. | வாழை நார்—ஓர் சிறந்த குடிசைத்தொழில். | 22 |
| 4. | நமது உணவு. | 24 |
| 5. | கவர்மெண்டாரின் பாரெஸ்டு நோக்கம். | 28 |
| 6. | வர்த்தமானக் குறிப்பு. | 32 |
| | ...லை வியாபாரம். | 33 |

JL
Y31m2, N26
N34.6.2
19401

3.
6.

எடிடர் & மானேஜர்:

## செவிட்டுத்தன்மை

மண்டை இடி, தலைவலி முதலியவை சுவஸ்தமாகும்.

### நூதனமான மேநாட்டு மருந்து

# லார்மலீன்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

லார்மலீன் என்னும் இம்மருந்தை வீடுகளில் வேறு அதிகப்பணச்செலவு இல்லாமல் மிகவும் சுலபமாக உபயோகிக்கக்கூடியது. இக்களிம்பு, நோய் உள்ள இடங்களில் தடவிய மாத்திரத்தில் வலியைப் போக்கும் தன்மையுள்ளதாயிருக்கிறது.

இதற்கு அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களும் கிடைத்திருக்கின்றன.

**நம்பிக்கையுள்ள நற்சாக்ஷிப் பத்திரம்.**

கிரைடன் நகரம், ஓயிட் ஹார்ஸ் ரோட்டிலுள்ள ஸ்ரீமதி E. குரோ எழுதுவதாவது:—"தாங்கள் எனக்கு அனுப்பிய சிறிய டின் லார்மலீன் களிம்பு என்னை என் கஷ்டத்தினின்றும் நீக்கி, என் தலைவலி, மண்டை இடி முதலியவைகளைச் சாந்தப்படுத்தி என்னைச் சந்தோஷிக்கச் செய்தது. அதிகச் செலவு செய்தும் குணமாகமல், கடைசியில் தங்களால் குணமடைந்ததற்கு நான் தங்களுக்கு நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்".

இன்றைக்கு ஒரு புட்டியை உபயோகித்துப் பாருங்கள்: மூன்று ரூபாய் மணியார்டர் செய்தால் எல்லா விலாசத்திற்கும் அனுப்பப்படும்.

விலாசம்:—

ஆரல் மெடிகேஷன் பிர்க்பெக் ரோட்டு,
பெக்கன்ஹேம், இங்கிலாந்து

*Address Orders to:—*

AURAL MEDICATION, BIRKBECK ROAD,
Beckenham, Eng.


1 MAY 1931


# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ் : மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் VI. 1931ஹ பிப்ரவரிமீ நெ. 2


## சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்து ஸ்டாண்டிங் ஆர்டரின் சம்பந்தமாக சில யோசனைகள்.

(ஸ்ரீமான் ஜீ. ஹரிஸர்வோத்தமராவ் எம். ஏ.)

(முன் சஞ்சிகை தொடர்ச்சி)

விறகு கூப்புகள் சம்பந்தமாகவும் பல கஷ்டங்களிருக்கின்றன. பஞ்சாயத்துகள் இரண்டுவகைக் கூப்புகளை வளர்த்து ஸம்ரக்ஷிக்க வேண்டும்—ஒரு வகை கிராம உபயோகத்திற்காகவும், மற்றொன்று வியாபார நிமித்தமாகவும். கூப்புகள் ஒவ்வொன்றும் குறைந்தது 10, 15ஏகரா விஸ்தீரணமுள்ளதாகவிருக்க வேண்டும். அவைகளில் ஒரே கூப்பைத்தான் பஞ்சாயத்து உபயோகிக்கலாம். கிராமம் எவ்வளவு பெரிதாதவிருந்தாலும் சரி, கூப்பில் விருக்ஷ வளர்ச்சி கிராமத்துக்குப் போதுமானதாக வில்லாதிருந்தாலும் சரி, பஞ்சாயத்துகள் ஒரே கூப்பைத்தான் உபயோகிக்கவேண்டும். நாம் ஒரு கூப்பு வெட்டப் பட்டபின்பு 10 வருஷபரியந்தம் அது மூடப்பட வேண்டும், இரண்டாம் வகைக்கூப்புகள் 5 வருஷம் வரையில் மூடப்படவேண்டும். ஏன் இந்த வித்தியாஸமோ? இன்னும் கலெக்டர் ஒரு வொர்கிங்கு பிளானை உத்திரவு செய்ய வேண்டியிருக்கிறது. 10, 15 ஏகராக்களும் ஒரே காலத்தில் உபயோகிக்கப்படக்கூடாது. கூப்பானது நான்கு சமபாகங்களாகப் பிரிக்கப் கூப்பை வெட்டலாமென்பதும், அதை நான்கு பாகங்களாக வரம்பு கட்டப்பட்டு ஒரு பாகம் உபயோகிக்கப்பட்டு முடிந்த பின்பு தான் மற்றொரு பாகம் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எந்தக்

கூப்பை வெட்டலாமென்பதும், அதை நான்கு பாகங்களாக வரம்பு கட்டுவதும் டிப்டி தாசில்தார் உத்திரவைப் பொருத்திருக்கின்றன. இரண்டாவது வகைக்கூப்பின் விரகு விற்ற முதல் கவர்மெண்டாருக்குச் சேரவேண்டியதாம். கூப்பு வெட்டப்பட்ட பின்பு அதில் ஏற்படக்கூடிய மேய்ச்சல் சௌகரியக் குறைவிற்காக பஞ்சாயத்துகளுக்கும் ஒரு கமிஷன் கொடுக்கப்படுமாம். இந்த இரண்டாவது வகைக்கூப்புகளின் சம்பந்தமாக ஜில்லா பாரெஸ்டு ஆபீஸர்தான் வொர்கிங்கு பிளானை விதிக்கவேண்டுமாம். சில்லரை உற்பத்திகளின் சம்பந்தமாய் பெர்மிட்கள் உபயோகிக்க வேண்டியிருக்கின்றன. காடுகளில் தீபற்றினால் அச்சங்கதியானது முதல் முதலாக ஜில்லா பாரெஸ்டு ஆபீஸருக்குத்தான் தெரியப்படுத்தப்பட வேண்டுமாம். எந்தெந்த பஞ்சாயத்துகளில் விரகுக்கூப்புகளிருக்கின்றனவோ அவைகளில் எல்லாம் கண்ட்ராக்டர்கள் சென்னை பாரெஸ்டு சட்டத்தின்படியும் அதைச் சேர்ந்த விதிகளின்படியும் நடக்கவேண்டுமாம். ஏன் கவர்மெண்டார் பஞ்சாயத்தையும் ரெவினியூ இலாகாவையும் இவ்வேலையை செய்யும்படியாய் அதிகாரம் கொடுக்கக்கூடாதோ தெரியவில்லை. இது சம்பந்தமாக இன்னொரு கஷ்டமுமிருந்து வருகிறது. அதாவது, டிப்டி தாசில்தார்கள் காடுகளைப் பார்வையிடப் போகும்பொழுது பஞ்சாயத்தார்களும் அவர்களுடன் போக வேண்டுமாம். பஞ்சாயத்தார்கள்கூடப் போகாத பக்ஷத்தில் டிப்டி தாசில்தார்கள் ஒன்றும் செய்ய முடியாதுதான். ஆனால், டிப்டி தாசில்தார்கள் பிரெஸிடெண்டுகளை கூட வரும்படியாகக் கட்டாய உத்திரவு செய்கிறார்கள். பஞ்சாயத்து பிரஸிடெண்டுகள் சம்பள உத்தியோகஸ்தர்களல்லவென்பதையும், அந்தஸ்துள்ளவர்களென்பதையும் இச்சில்லரை உத்தியோகஸ்தர்களாகிய டிப்டி தாசில்தார்கள் அறிகிறதில்லை. இக்காரணத்தைக் கொண்டே சில பிரஸிடெண்டுகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அநேக பிராதுகள் கூட ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து டிப்டி தாசில்தார் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகும்பொழுது அவருக்கு ஒத்தாசைக்காக பஞ்சாயத்துகள் ஒரு பஞ்சாயத்தாரை அனுப்பினால் போதுமென்று தோன்றுகிறது.

பஞ்சாயத்து பணங்கள் கிட்டின போஸ்டாபீசு ஸேவிங்ஸ் பாங்கிலோ அல்லது கோ ஆபரேடிவ் பாங்கிலோ போட்டு வைக்கப்பட வேண்டுமென்று ஸ்டாண்டிங்கு ஆர்டரில் கூறப்பட்டிருக்கிறது. கோ ஆபரேடிவ் பாங்குகள் எங்குமிருக்கவில்லை, போஸ்டாபீஸ் ஸேவிங்குஸ் பாங்கிகளும் பல பஞ்சாயத்துகளுக்குக் கிட்டின இடங்களிலில்லை. பஞ்சாயத்துகள் வேண்டும் பொழுதெல்லாம் பணங்களை வித்டிரா செய்து கொள்ளலாமென்று விதிக்கப்பட்டிருக்கிற பொழுது அவைகளை [illegible] பாங்கிகளில் போட்டுவைத்துக் கொண்டாலென்ன?



பாரெஸ்டு பஞ்சாயத்துகள் தற்போதில் சட்டபூர்வமான அதிகாரமில்லாத வெறுங் குத்தகைக்காரர்களாக விருக்கின்றன. அவைகளுக்குக் குத்தகைப்பணங்களை கவர்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய கடமை ஒன்று இருக்கிறதே யொழிய வேறு தக்க உரிமைகளும் அதிகாரங்களுமில்லை. சட்ட அதிகாரமானது ரெவினியூ இலாகாவிலும் டிப்டி தாசில்தார்களிலும் அமைந்திருக்கிறது. டிப்டி தாசில்தார்கள் தான் ஸர்வாதிகாரிகளாக விருக்கிறார்கள். நன்றாய் வேலைசெய்கிற பஞ்சாயத்துகளுக்கு பாரெஸ்டு ஆபீஸரின் அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டியது வெகு அவசியம். அப்படிப்பட்ட பஞ்சாயத்துகளிலுள்ள பஞ்சாயத்தார் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாய் இவ்வதிகாரம் இருக்கவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் சென்னைப் பாரெஸ்டு சட்டத்தின் படி பாரெஸ்டு ஆபீஸருக்கு ஏற்படக்கூடிய அதிகாரங்களை வஹிக்க வேண்டும். இது இந்தமாதிரி ஏற்படாத வரையில் யார் மேற்கூறிய அதிகாரங்களை வஹிக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஆனபோதிலும், எப்பொழுது டிப்டி தாசில்தார்களுக்கும் வாட்சர்களுக்கும் அதிகாரங்கள் உண்டாயிருக்கின்றனவென்று ஒப்புக்கொள்ளப் படுகிறதோ, ஏன் பஞ்சாயத்துகளுக்கு மாத்திரம் அவை ஏற்படவில்லை யென்று சொல்லக்கூடுமோ தெரியவில்லை. பஞ்சாயத்துகள் அக்ரீமெண்டுபடியே பாரெஸ்டு ஆபீஸர்கள் தான் என்றுஎன் புத்திக்குப்படுகிறது. ஆனால், அவைகளுக்கு இவ்வதிகாரங்களில்லை யென்று கருதப்படுகிற படியால் சீக்கிரத்தில் அவைகளுக்குச் சட்டபூர்வமான அந்தஸ்து ஏற்படத்தான் வேண்டும்; இல்லாவிட்டால், கவர்மெண்டார் பஞ்சாயத்துகளை யெல்லாம் எடுத்துவிட்டுக் காடுகளை டிப்டி தாசில்தார்களின் நிர்வாஹத்திற்குக் கொடுப்பதே நலமாயிருக்கும்.

டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரின்படி பஞ்சாயத்துகள் குற்றங்களை டிப்டி தாசில்தாருக்கும் டிவிஷனல் ஆபீசருக்கும் தெரிவிக்கவேண்டும்; அதாவது 50ரூபாய் மதிப்புக்கு மேற்பட்ட குற்றங்களை ரெவினியூ டிவிஷனல் ஆபீஸருக்கும் 50ரூபாய் மதிப்புக்குக் குறைந்த குற்றங்களை டிப்டி தாசில்தாருக்கும் அவர்கள் தெரிவிக்கவேண்டும். அக்ரீமெண்டு பாரத்திலுள்ள விதியில் அவைகள் பிராஸிகியூஷன் வேண்டிய குற்றங்களைத் தாசில்தாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரில் டிப்டி தாசில்தார்களுக்கு ஷை குற்ற ரிப்போர்ட்டுகளின் பேரில் உத்திரவுகளைச் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. டிவிஷனல் ஆபீஸருக்கு ரிபோர்டு செய்யப்படும். கேஸுகள் விஷயமாய் என்ன செய்யப்படவேண்டுமென்று விவரிக்கப்படவில்லை. கம்பவுண்டிங்கு அதிகாரம் கொடுக்கப்பட்ட பஞ்சாயத்துகள் மேய்ச்சல் சம்பந்தமாக 3பங்கு கட்டணத்தையும் வெள்ளாடு சம்பந்தமாக 5பங்கு கட்டணத்தையும் அபராதமாக விதிக்கலாமென்று கூறப்பட்டிருக்கின்றது. கம்பவுண்டிங்கானது

இதர அதிகாரிகளால் விதிக்கப்பட்டால் அவர்கள் எவ்வளவு லிமிட்டுக்குள் விதிக்கலாம் என்று கூறப்படவில்லை. அது விஷயமாய் ஒரு திருத்தம் ஸ்டாண்டிங்கு ஆர்டரில் ஏற்படவேண்டும்.

ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் கலெக்டருடைய உத்திரவை யடைந்து கொண்டு அவர்களுக்குத் தோன்றிய பஞ்சாயத்தாரைப் பஞ்சாயத்திலிருந்து நீக்கலாமென்று ஸ்டாண்டிங்கு ஆர்டரில் கூறப்பட்டிருக்கிறது. ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் பஞ்சாயத்தார்களைப் பஞ்சாயத்துகளின் அபிப்பிராயங்களைக்கூட அடையாமல் நீக்கலா மென்றால் பஞ்சாயத்தார் சம்பந்தமாக தேர்தல் ஏன் வேண்டும்? மேற்கூறிய அதிகாரம் ரத்து செய்யப்பட வேண்டும்.

ஆகவே, டிராப்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரில் பிழைகளும் அதிருப்திகரமான விதிகளுமிருக்கின்றன. ஸ்டாண்டிங்கு ஆர்டர் கடைசியாக கவர்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப் படுவதற்குள் மற்றொரு திருத்த டிராப்டானது பகிரங்கப் பிரகடனஞ் செய்யப்பட்டு அதன் விஷயமாய் ஜனங்களின் அபிப்பிராயம் அமையப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

# குறிப்புகள்.

## தபால் அறிக்கையும்—சந்தாதாரர்கட்கும் பஞ்சாயத்து பிரிசிடெண்ட்கட்கும், வேண்டுகோளும்.

ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து வி. பி. யில் அனுப்பப்படும் கடிதங்கள் பார்ஸல்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியவைகள் குறிப்பிட்ட இடங்களுக்குப் போய்ச்சேர்ந்த மூன்று நாட்கள் வரைதான் தபாலாபீஸ் இருப்பில் வைக்கப்படு மென்றும் அதற்கு மேல் பத்து நாட்கள் வரையிலே தங்க வைக்க வேண்டு மானால் நாள் ஒன்றுக்கு இரண்டணா வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி மனுச் செய்துகொள்ள வேண்டு மென்றும் தபால் இலாகா டைரக்டர் அறிவித்திருக்கிறார். இதனால் வியாபாரிகளுக்குப் பெருங் கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். இதை வியாபாரிகள் கண்டிக்கிறார்கள். நம் சந்தாதாரர்களும் பஞ்சாயத்து பிரிசிடெண்டுகளும், வி. பி. வருமென்று எதிர் பாராமல் சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பி எம்மை ஆதரிக்க முன் வரவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம். அப்படி செய்யத் தவறின் வி. பி. அனுப்பினால் உடனே வி. பி.யைப் பெற்றுக் கொள்ளத் தவறாதிருக்க வேண்டுகிறோம்.

(பத்திராதிபர்)

A A A A A



நாவாச்சாரம் - பன்றி நெய் - வெங்காயச்சோறு சமனெடை யாகச் சேர்த்துச் சரீரத்தில் தேய்த்துக் கொண்டு, வெந்தழலில் பிரவேசித்தாலும் அதன்வெப்பம் தெரியாதாம்.

மோட்டுப்பூச்சி இருக்குமிடத்தில் கர்ப்பூரத்தைத் தூள் செய்து போட்டால் பூச்சிகள் அவ்விடத்தை விட்டுப் போய் விடுமாம் பினாயல் நீரினால் கழுவினாலும் நல்ல எண்ணெய் விளக்கு வைத்தெரித்தாலும் மோட்டுப் பூச்சி அழிந்து போகுமாம்.

இரணம் இருக்குமிடத்தில், 2 தோலா புதுவெண்ணெயைச் சுத்த ஜலத்தில் 6 முறை சுத்தஞ் செய்து, அதனுடன் அரைத்தோலா சந்தனத் தைலத்தைச் சேர்த்துத் தடவினால் இரணம் குணப்படுமாம்.

சந்தனத் தைலத்தையும், கடு கெண்ணெயையும் சமனெடையாகச் சேர்த்து முகப்பருவில் தடவினால், பருவு மறைந்து விடுமாம்.

(பால விநோதினி)

A A A A A

நமது ஆங்கில சஞ்சிகையில் பிக்குலால் பாய்ச்சந்து கிராம ஜனக் கல்வியைப்பற்றி ஒரு சிறந்த யோசனையைச் சொல்கிறார். அதாவது கிராம ஜனக்கல்வி முறையில் வியவஸாய விஷயங்களும் இந்த தேசத்துக்கு வேண்டிய அபிவிருத்தி விஷயங்களும் சேர்க்கப் பட வேண்டுமென்று கூறுகிறார். நமது தேசத்திய கல்வி இலாகாவும் வியவஸாய இலாகாவும் இத்துறையில் ஒத்துழைக்க வேண்டு மென்றும், உபாத்தியாயர்கள் சாஸ்திரீய வியவஸாயக் கல்வியில் போதனையை அடைந்தவர்களாக விருக்க வேண்டு மென்றும், நிரூபண ஸ்தலங்களும் தோட்டங்களும் ஏற்படுத்தப்பட்டு நிபுணர்களால் நிர்வஹிக்கப்பட வேண்டு மென்றும், கிராமாந்தரச் செல்வநிலை விஷயங்கள் போதனைகளில் சேர்க்கப்பட வேண்டு மென்றும், பிரதிகிராமத்திலும் சுய பாஷை, கணிதம், பூமிசாஸ்திரம், வியவஸாயம், வியவஸாய உற்பத்திகளை விற்கவேண்டிய விஷயங்கள், சரித்திரம் இவைகளில் போதனைகளைச் செய்கிற பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டு மென்றும், கிராமங்களுக்கு உபயோகமான பத்திரிகை யொன்று பிரதி மாகாணத்திலும் சுய பாஷைகளில் ஏற்பட வேண்டு மென்றும், இந்தியா தேசத்துக்கு முழுமைக்குமே மாகாணங்களில் நடக்கும் முயர்ச்சிகளை அநுஸரித்த "ரூரல் இந்தியா"வைப் போன்ற பத்திரிகை யொன்று நடைபெற வேண்டு மென்றும் கூறுகிறார்.

A A A A A

இந்திய வியவஸாய ஆராய்ச்சி சபையார், யாரொத்தர் எருவிற்கு உபயோக மாகிற எலும்பு மாவை அரைக்கக்கூடிய சிறந்த யந்திரத்தைப்

பற்றி டிசைனைத் தயாரித்து அனுப்புகிறாரோ அவருக்கு 3500 ரூபாயைப் பரிசாகக் கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

Λ Λ Λ Λ Λ

மைசூர் கவர்மெண்டார் அந்த இராஜ்ஜியத்தில் கடைகளில் விற்பவர்களோ, மிட்டாய், சாப்பாடு முதலியவைகளை செய்பவர்களோ, பால், தயிர், நெய், எண்ணைக்காய்கறிகளை விற்பவர்களோ குஷ்டரோகிகளாக விருக்கக் கூடாதென்றும், ஆறுகுளம் குட்டைகளில் குஷ்டரோகிகள் குளிக்கக் கூடாதென்றும் ஒரு உத்திறவை வெளியிட்டிருக்கிறார்கள்.

Λ Λ Λ Λ V

சென்னை ஆயிர விளக்கில் ஒரு கவர்மெண்டு ஆயுர்வேத ஆஸ்பத்திரியானது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் திறப்பு விழாவை பிரதம மந்திரியாகிய கனம். திவான் பஹதூர் பி. முனிசாமி நாயுடுகாரு செய்தார். இந்த ஆஸ்பத்திரி நன்றாய் நடந்தால் அநேக ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் சென்னை நகரத்திலும் வெளியூர்களிலும் ஏற்படும்.

Λ Λ Λ Λ Λ

ஐக்கிய இயக்கம் எல்லா வழிகளிலும் உபயோகப் படுகிறதென்பதில் சந்தேகமில்லை. பரோடா சமஸ்தானத்தில் உஞ்சு கோஅபரேடிவ் ஸொஸைட்டியானது தன்னுடைய மெம்பர்களை கல்யாணங்களில் குறைவாகச் சிலவு செய்யும்படிச் செய்து அவ்விதமாக அவர்களுக்கு 7 இலக்ஷ ரூபாய்ச் சிலவைக் குறைத்ததாம்.

Λ Λ Λ Λ Λ

தென்னார்காடு ஜில்லாக் கலெக்ட்டர் தன்னுடைய டிவிஷனல் ஆபீஸர்களுக்கும், தாசில்தார்களுக்கும் சில்லரை உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம உத்தியோகஸ்தர்களை மரியாதையுடன் நடத்த வேண்டுமென்று உத்திரவு அனுப்பி யிருக்கிறாராம்.

## வாழை நார்—ஓர் சிறந்த குடிசைத்தொழில்.

சுமார் 30 வருஷங்களுக்கு முன் நம்முடைய தேசத்தில் வாழை நாரிலிருந்து வஸ்திரங்கள் நெய்யப்பட்டன. கயிறுகளும் செய்யப்பட்டன. கயிறுகள் மேனாட்டு தேசங்களுக்குக்கூட ஏற்றுமதி செய்யப்பட்டன. திருவனந்தபுரத்துக் கைத்தொழிற் சாலையில் இத்தொழில்களின் சம்பந்தமாக பல பரிசோதனைகள் செய்யப்பட்டன. வாழைப்பட்டையின் சதையையும் சாரையும் நீக்க ஒரு சுலபமான இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. பஞ்சைப்போல் வாழை நாரை நூல் நூற்க வேண்டியதில்லை; வாழை நார் நூல் போலவே யிருக்கிறது. ஆனால் வஸ்திரம் நெய்வதில் வாழை நார் குருக்கு நூலுக்குத் தான் உபயோகப்படும், நீளவாட்டில் உபயோகப்படுத்தினால் அறுந்துபோம்.



ஆகவே, நீளவாட்டிற்கு பஞ்சு நூலையாகிலும், பட்டு நூலையாகிலும் உபயோகிக்க வேண்டும். மூன்று பலம் பஞ்சு நூலால் நெய்யக்கூடிய வஸ்திரத்தை ஒருபலம் வாழை நாரைக்கொண்டு நெய்யலாம். தலைகுட்டைகள், புடவைகள், சரிகைப்போட்ட வஸ்திரம், பூப்போட்ட வஸ்திரங்கள், ஜமக்காளம், படுதாத் துணி முதலியவைகளை யெல்லாம் வாழை நாரைக் கொண்டு நெய்யலாம். ஆகவே, பயிரிடும் குடிகள் வேலையில்லாக் காலங்களில் இந்தத்தொழிலை யநுஷ்டித்தால் லாபங்களை அடைவார்கள். செங்கல்பட்டுக்கடுத்த மெல்ரோஸ் புரத்தில் வாழைநார்த் தொழில் வெகு திறமாய் நடத்தப்பட்டதாம். ரெவரண்டு ஆண்டிரூ அவர்கள் அம்முறைகளைப்பற்றி விவரமாய் எழுதியிருக்கிறாராம். ஒவ்வொரு வாழை மரத்திலும் சுமார் 3 பலம் நல்ல உலர்ந்த நார் கிடைத்ததாம். ஏகராவுக்கு 600 மரங்கள் வீதம் நட்டால் ஒரு ஏகராவுக்குச் சுமார் 48 வீசை நார் கிடைக்குமாம். வீசை 1 ரூபாய் வீதம் 48 வீசைக்கு 48 ரூபாய் கிடைக்கும். ஒரு பையன் நாளொன்றுக்கு 5 வாழைமரப்பட்டையிலிருந்து நாரெடுக்கக்கூடுமாம். ஆகவே, ஒரு ஏகரா நாரை ஓரே நாளில் எடுப்பதாயிருந்தால் 120 பையன்கள் வேலை செய்ய வேண்டும். ஒவ்வொரு பையனுக்கும் 2 அணா கூலி. இந்த நார்களைக் கொண்டு மெல்ரோஸ்புரத்தில் மாடுகட்டப் பெருமனை கயிறுகளைகூட கையால் முறுக்கிச் செய்யப்பட்டனவாம்; கயிறு முறுக்கக்கூட, ஒரு ஏகரா பாகுலாகிய 48 வீசை நாரை முறுக்க, 120 பிள்ளைகள் வேண்டும். வாழைத் தோட்டங்களில் ஓரே காலத்தில் எல்லா மரங்களிலும் காய்கள் முற்றுவதில்லையாகையால் மரங்களைக் கிரமத்திற்குத் தக்கவாறு மூன்று நான்கு மாதங்கள் வரையில்கூட கொஞ்சம் கொஞ்சமாய் வெட்டலாம். ஆகையால், வேலையில்லாத காலங்களில் வியவஸாயிகளின் பிள்ளைகளுக்கு மூன்று மாதகாலம் வரையிலாகிலும் வேலை கிடைக்கும். ஒரு ஏகராவில் பலிதமாகும் 48 வீசை நாரை எடுக்கவும், கயிறு செய்யவும் 33 ரூபாய்க் கூலியாகிறதாம். கயிறுகளை வித்தால் 48 ரூபாய் கிடைக்குமாதலால் ரூ. 15 லாபம் கிடைக்கக்கூடும்.

வாழை மரங்களில் நல்ல நாரைக் கொடுப்பவை கொட்டை வாழை தான். தாரை வெட்டினபின் மரத்தை மூன்று அடித்துண்டுகளாக துண்டு போட்டுக் கொள்ள வேண்டும். இவைகளின் பட்டைகளைத் தனித்தனியாக எடுத்துப் பட்டை ஒவ்வொன்றையும் இரண்டு அங்குல அகலப் பட்டைகளாக நீளவாட்டில் அறுக்க வேண்டும். ஒரு சிறிய மேஜைமேல், நெற்குத்தும் ஏற்றம் போல் அமைத்திருக்கும், சுமார் ஒரு முழ நீளமுள்ள, வாள்போன்ற, மழுங்கிய, கூரில்லாத இரும்புக் கத்தியின் கீழ் மட்டைத்துண்டுகளை வைத்து ஒரு புறமாக மட்டைகளை இழுப்பார்கள். மேலே அழுங்கியிருக்கும் கத்தியானது பட்டைத் துண்டின் சாரையும் சதையையும் நீக்கும். இவ்விதமாக 5, 6 தரம் பட்டைகளைக் கிழித்தால் சதையெல்லாம் நீங்கி வெண்மையான நார்

கிடைக்குமாம். இந்த நாரை வெய்யலில் உலர்த்தியெடுத்துக் கயிறுகள் செய்வார்கள். வஸ்திரம் செய்யவேண்டுமென்றாலும் இதுதான் வழி. இதற்கு வேண்டிய ஏத்தம்போன்ற கத்தியைக் கருமார்கள் எளிதில் செய்வார்களாம். கத்தியின் விலை 5 ரூபாய்க்குள்ளேயே அடங்குமாம்.

நம்முடைய மாஹாணத்தில் $1\frac{1}{2}$ இலக்ஷ ஏகரா வாழைத் தோட்டங்களிருக்கின்றன. இத்தொழிலை யாவரும் அநுஷ்டித்து வரும்படிகளை யடையக் கூடும். வாழை நாரை உரிக்கும் இயந்திரங்கள் செங்கல்பட்டுக்கடுத்த மெல்ரோஸ்புரமதிகாரிகளுக்கு எழுதித் தருவித்துக் கொள்ளப்படலாம்.

## நமது உணவு.

(5-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

### நல்ல உணவு வஸ்துக்கள்.

பால்:—மனிதனுக்கு மற்ற எல்லா உணவு வஸ்துக்களையும் காட்டிலும் பால் தான் உயர்வானது. சின்னக் குழந்தைகளுக்குத் தாயார் பால் தான் திறமானது. தாயார் பாலில் குழந்தைகள் வளரவேண்டியதற்கு வேண்டிய வஸ்துக்களெல்லாம் சரியான அளவுகளில் இருக்கின்றன. ஊன் பதார்த்தங்களும் (proteins), கொழுப்பும் (fat) கஞ்சித்திரவ பதார்த்தங்களும், உலோக உப்புக்களும், விடாமின்களும் சரியான அளவுகளில் நிறைந்திருக்கின்றன. ஆகவே, தாயார்களின் உணவுகள் இவைகளைச் சரியாய் ஸ்தனயத்தில் அமைக்கக் கூடியவைகளாக விருக்க வேண்டியது அவசியம். அவர்கள் தான்ய சாதத்தோடு பால், தயிர், மோர், வெண்ணை, நெய் முதலியவைகளையும், பச்சைக் கீரைகளையுள்ள காய்கறிகளையும், பழங்களையும் புசிக்க வேண்டும். கோஷாப் பெண்பிள்ளைகளாயிருந்தால் அவர்கள் மீனெண்ணெயில் சிறிது பாகத்தை தினந்தோறும் உட்கொள்ள வேண்டும், அல்லது தினந்தோறும் கொஞ்ச நேரம் வெய்யலில் இருக்க வேண்டும். தாயார்கள் அடிக்கடி எண்ணை தேய்த்துக் கொள்ளவும் வேண்டும். குழந்தைகளுக்கு உணவுகளுக்கு இடையே இடையே குடிக்க நல்ல ஜலமும் கொடுக்க வேண்டும்.

பசுவின் பால்:—பெரிய குழந்தைகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் பசும்பால் தான் திறமான உணவு. பசுவின் பாலில் உயர்வான ஊன் பதார்த்தங்களிருக்கின்றன. அதைத்தான் ஊன் பதார்த்தங்களைக் குறைவாக உடைத்தான தான்ய உணவோடு புசிக்க வேண்டும். பசுவின் பாலில் கொழுப்புகள் நிறைந்திருக்கின்றன. பசுக்களுக்கு புல் பச்சை ஆகாரம் சரியாயிருந்து அவைகள் நல்ல காற்றும் வெய்யலும் படும்படி கொட்டில்களில் அமைக்கப்பட்டால் தான் பாலில் விடாமின் ஏயும், மற்ற விடாமின்களும், உணவு அம்சங்களும் சரிவர ஏற்படும். விடாமின் ஏ சரியாய் ஏற்பட்டால் தான் பாலைச் சாப்பிடும் குழந்தைகளுக்கு நோய் நொடிகள் ஏற்படா. பாலிலுள்ள கொழுப்புகள் வெகு சுலபாய் ஜீர்ணமாகக் கூடியவை. பாலில் 100க்கு 5 விழுக்காடு கஞ்சித்திரவ பதார்த்தங்களிருக்கின்றன. அதில், பல்லும் எலும்பும் சரியாக வளர்வதற்கு வேண்டிய பொருள்களாகிய கால்ஷியமும் பாஸ்பரஸும் சரியான ஒழுங்கில் நிறம்ப இருக்கின்றன. பாலில் இரும்பு இல்லை. குழந்தைகளுக்குப் பிறக்கும்போதே சரீரத்தில் அதிக இரும்பு இருப்பதால் அந்த இரும்பு குழந்தைப்பருவம் முடியும் வரையில் போதும். குழந்தைப்பருவம் முடிந்து குழந்தைகள் சிறு பிள்ளைகளான பின்பு அவர்கள் பாலைத்தவிர இதர இரும்பையுடைய வஸ்துக்களைப் புசிப்பார்கள். பசுவின் பாலில் விடாமின் பீயுமிருக்கிறது. ஆனால் ஒருவன் பாலையே ஆகாரமாக வைத்துக் கொள்வானாகில் அவன் சற்றேறக்குறைய முக்கால் பட்டணம்படிப் பாலை நாளொன்றுக்குச் சாப்பிட வேண்டும். பசுவின் பாலில் ஸீ விடாமின் கொஞ்ச அளவில் தானிருக்கிறது. ஆனபோதிலும், அது போதும். ஆனால் பசுவின் பால் காய்ச்சப்பட வேண்டியிருப்பதால் காய்ச்சப்படுகையில் இவ்விடாமின் அடியோடே போய் விடுகிறது. குழந்தைகளுக்கு ஆகாரம் காய்ச்சின பாலாக விருக்குமானால், அவைகளுக்கு பழ ரஸங்கள் கொடுக்கப்பட்டால் தான் அவைகளுக்கு ஸீ விடாமின் கிடைக்கும். பழ ரஸங்களில் சீமைத் தக்காளிப்பழந்தான் இவ்வகையில் வெகு உயர்வானது. பசுவின் பாலில் கொஞ்சம் டி விடாமின்கூட இருக்கிறது. ஆனால், அது குழந்தைகளின் வளர்ச்சிக்கு வேண்டிய அளவில் இல்லை. ஆகவே, அவைகளின் சரீரத்தில் சூரிய வெளிச்சம் அதிகமாய்ப்பட வேண்டும், அவைகளுக்கு மீனெண்ணையும் கொடுக்கப்பட வேண்டும். வெண்ணை யெடுத்த பால் குழந்தைகளின் வளர்ச்சியை நன்றாய்ச் செய்யக்கூடிய தக்க உணவு. அதில் ஊன் பதார்த்தங்களும் (proteins), நிரம்ப விடாமின் பீயும், 10இல் ஒரு பங்காக விடாமின் ஏயுமிருக்கின்றன. மோரும் தயிரும் நல்ல உணவுகள்.

பாலில் கிருமிகள் வெகு வேகமாய் வளர்கின்றன. அவைகள் பாலைக்கெடுப்பதுடன், அவைகள் பாலைக்குடிப்பவர்களுக்கு நோயையும் உண்டாக்குகின்றன. குழந்தைகளுக்கு வரும் வயிறெடுப்பு, சீதபேதி முதலிய நோய்களுக்கு பாலில் விஷக்கிருமிகள் ஏற்படுவது தான் காரணம். ஆகவே, பாலானது நன்றாய்க் காய்ச்சப்பட்ட பின்புதான் உபயோகிக்கப்பட வேண்டும். பால் நன்றாய்க் காய்ச்சப்பட்டால் அதிலுள்ள விஷக்கிருமிகள் நசித்துப் போகும்.

நம்முடைய தேசத்தில் நாம் பாலில் உறைகுத்தி அதை மோராக்கித் தான் அதிகமாக உபயோகிக்கிறோம். பாலைக்காய்ச்சி நாம் உறை குத்துவதால் அதில் விஷக்கிருமிகளிருப்பதில்லை. மோரின் புளிப்புக்கு அதில் லாக்டிக் ஆஸிடென்கிற திராவகம் இருப்பதுதான் காரணம். பாலில் விஷமில்லை



199401

சில கிருமிகளும் உண்டு. அவைகள் தான் லாக்டிக் ஆஸிடை உண்டாக்குகின்றன. பாலில் விஷக்கிருமிகள் ஏற்படுவதற்கு முன் அதில் உரைகுத்தப்பட்டால் அது உரைகுத்தாத பாலைவிட அதிககாலம் கெடாமல் இருக்கும். விஷமில்லாத கிருமிகள் விஷக்கிருமிகள் உண்டாவதைத் தடுக்கின்றன. நமது தேசத்தவர்களுக்கு மோர்தான் பாலைக்காட்டிலும் நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடிய உணவுவஸ்து. மோரானது சரீரத்திற்கு நல்ல வலிவைக் கொடுக்கத்தக்க வஸ்து. அதை அதிகமாக உபயோகிப்பவர்கள் தீர்க்காயுளை அடைகிறார்கள்.

எருமைப்பாலும் நல்ல உணவுப்பொருள். அதில் பசுவின் பாலைக்காட்டிலும் அதிக ஊன்பதார்த்தங்களும் இரட்டிப்பு அளவு கொழுப்பும் இருக்கின்றன. எருமைப்பாலும் நமது தேசத்தில் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. அதிலிருந்துதான் நெய்யானது உண்டாக்கப்படுகிறது.

ஆட்டுப்பாலில் பசுவின் பாலைக்காட்டிலும் அதிக ஊன் பதார்த்தங்களும் கொழுப்புகளும் விடாமின் ஏயும் டீயும் இருக்கின்றன. ஆதலால், ஆட்டுப்பால் வெகு உயர்வான உணவுப்பொருளாகிறது.

வெண்ணெயில் பாலின் கொழுப்புகளெல்லாமும், அதன் விடாமின் ஏயின் பெரும்பாகமுமிருக்கின்றன. அது நன்றாய் ஜீர்ணமாகிற கொழுப்புப் பொருள். பீ விடாமினும், ஸீ விடாமினும் அதில் இல்லை, டி விடாமின் மாத்திரம் அல்ப அளவிலிருக்கிறது. மாடுகளின் உணவுகளுக்குத் தக்கபடி வெண்ணெகளில் ஏ விடாமின் ஏற்படுகிறது. வெண்ணெ மஞ்சள் நிறமாகவிருந்தால் ஏ விடாமின் அதில் அதிகமாகவிருக்கும். வெண்ணெயை நெய்யாகக் காய்ச்சுவதில் அதை மூடிக் காற்றுப்படாமல் காய்ச்சவேண்டும், காய்ச்சப்பட்ட பின்பும் நெய்யானது நன்றாக மூடிவைக்கப்பட வேண்டும். காற்றுப்பட்டால் ஏ விடாமின் நசித்துப்போம்.

நமது உணவில் பால், தயிர், மோர், வெண்ணெ, நெய் முதலிய வஸ்துக்கள் தக்கபடி அமைந்திருந்தால் நாம் மாம்ஸ வஸ்துக்களைப் புசிக்கவேண்டியதில்லை. பாலைச்சாப்பிடும் பக்ஷத்தில் மனிதன் தினந்தோறும் ஒரு பைண்டு அல்லது ஒரு குவார்டுக்குக் குறையாமல் சாப்பிடவேண்டும்.

மாம்ஸ ஆஹாரப் பொருள்களில் லிவர் முக்கியமானது. அதில் கஞ்சித்திரவ பதார்த்தங்கள் (carbohydrates) நிரம்ப இருக்கின்றன. அதில் ஏ, பி ஸீ. டி விடாமின்களும் வேண்டிய அளவுகளில் இருக்கின்றன. விடாமின் ஏ அதில் நிரம்ப இருக்கிறது. ஆகவே, மீனெண்ணெயில் கொஞ்ச அளவை நல்லெண்ணெ, கடுகெண்ணெ, தேங்கா யெண்ணெ முதலிய சாக எண்ணெகளுக்குச் சேர்க்கப்படுவது நலம். மேலும், லிவரிலுள்ள ஊன் பதார்த்தங்கள் மனித சரீரத்திற்கேற்றவை. லிவரில் இரத்தத்திற்கு அவசிய



மாக வேண்டிய பொருள்களாகிய இரும்பும், மாங்கனீஸும் இருக்கின்றன. அதில் கொழுப்பும் இருக்கிறது. மாம்ஸங்களைப் புசிக்கிற மனிதர்கள் வாரத்திற் கொரு விசை லிவரை ஆகாரத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

லிவருக்கு அடுத்த படியாக உணவு குணத்தில் உயர்ந்தவைகள் முட்டைகள். அவைகளில் ஸீ விடாமின் தவிர மற்ற எல்லா விடாமின்களுமிருக்கின்றன. முட்டையின் வெண்மையான வஸ்துவில் அல்புமினென்கிற சுத்தமான ஊன்பதார்த்தம் இருக்கிறது. கருவு பாகத்தில் கொழுப்புகளும், கால்ஷியமும், பாஸ்பரஸும், இரும்பும் நிரம்ப இருக்கின்றன. மனிதர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மூன்றுக்கு மேல் முட்டைகளைப் புசிக்கக்கூடாது. மாம்ஸமானது சிறந்த ஊன் பதார்த்தங்களையுடையது. அரிசி, கோதுமை முதலியதானிய உணவுகளோடு புசிப்பதற்கு அது தக்க உணவுப்பொருள். தானிய உணவு மாம்ஸத்தோடுப் புசிக்கப்பட்டால் சரீரத்திற்கு வேண்டிய விடாமின் ஏ ஏற்படும். மாம்ஸத்தில் விடாமின் பி இல்லை. அவ்வுணவு குடலில் சேரும் பொழுது அதற்கு பீ விடாமின் தேவையாகவிருக்கிறது. பீ விடாமினை கோதுமை, தக்காளிப் பழம் முதலியவைகளைப் போன்ற உணவு வஸ்துக்களிலிருந்து அடையவேண்டியிருக்கிறது. மாம்ஸத்தில் ஸீ விடாமின் கொஞ்ச அளவில் தான் இருக்கிறது. ஆகையால், மனிதன் நல்ல சிவந்த மாம்ஸத்தையோ அல்லது வேக வைக்காத பச்சை மாமஸத்தையோ புசித்தால் தான் தக்க அளவில் ஸீ விடாமினை அடையக்கூடும். மாம்ஸத்தில் டீ விடாமின் வெகு குறைவாக விருக்கிறது; ஈ விடாமினும் கொஞ்சம் இருக்கிறது.

மூத்திரகோசம், மூளை முதலியவைகளும் நல்ல உணவுப் பொருள்கள். அவைகளிலுள்ள ஊன் பாதர்த்தங்கள் வெகு சிறந்தவை. அவைகளில் பீ விடாமின் அதிகமாக விருக்கறது, கொஞ்ச அளவுகளில் ஏ விடாமினும் ஸீ விடாமினும் கூட இருக்கிறது. மூளையில் கொழுப்புகளும், பாஸ்பரஸும், செம்பும், இரும்பும் இருக்கின்றன. மூத்திர கோசத்தில் கஞ்சித்திரவ பதார்த்தங்களு மிருக்கின்றன.

மீன்களும் வெகு சிறந்த உணவுப் பொருள்கள். அவைகளில் ஸீ விடாமினைத் தவிர மற்ற எல்லா விடாமின்களுமிருக்கின்றன. மீனெண்ணெகளில் ஏ விடாமினும், டி விடாமினும் அதிகமாக விருக்கின்றன. சமுத்திர மீன்களின் எண்ணெதான் மீனெண்ணெகளில் சிறந்தது. மீன்களில் அயடீனும் செம்பும் கூட இருக்கின்றன.

முட்டை, மாம்ஸம் லிவர், மூத்திர கோசம்: மூளை, மீன் இவைகளெல்லாம் புளிப்பை உண்டாக்குகிற உணவுப்பொருள்கள். ஆதலால், இவைகளைப் புசிக்கிறவர்கள் நிரம்ப காய் கறிகளையும் பழங்களையும் உபயோகிக்க வேண்டும். இல்லாவிட்டால் இரத்தமும் சரீரசத்துக்களும் கெட்டுப்போம்.

(தொடரும்)

# கவர்மெண்டாரின் பாரெஸ்டு நோக்கம்.

சென்னை ரோடரி கிளப்பில் சென்னை பாரெஸ்டு சீப் கன்ஸர்வேடராகிய ஆர். டி. ரிச்சுமண்டு அவர்கள் வாஸித்த வியாஸத்தின் சுருக்கம்.

சென்னை பாரெஸ்டு இலாகாவானது முதல் முதலில் 1856-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஆனபோதிலும், அதற்கு முன்னேயே வெகு காலமாகத் தென்னிந்தியக் காடுகள் வெகு முக்கியமானவைகளாகக் கொண்டாடப்பட்டன. அவைகளிலிருந்துதான் பொம்பாயில் கப்பல் நிர்மாண வேலைக்கும் பிரங்கிவண்டி நிர்மாண சாலைக்கும் வேண்டிய தேக்கு முதலிய மரங்கள் அடையப்பட்டு வந்தன. 1811இல் இங்கிலாந்தில் கப்பல் வேலைக்கு வேண்டிய ஓக் மரங்கள் அகப்படாமல் போய்விட்டன. இந்தியாவிலும் அக்கஷ்ட மேற்பட்டது. அப்பொழுது யாரோ ஒருவர் தேக்கு மரத்தை இவ்வேலைக்கு உபயோகிக்கக்கூடு மென்கிற சிறந்த யோசனையைச் சொன்னதின் பேரில் தேக்கு மரம் உபயோகிக்கப்பட ஆரம்பித்தது. மலையாளத்திலும், ஆனைமலையிலும் தேக்குக்காடுகள் அடர்ந்திருந்தன. அப்படியிருந்தும் அக்காடுகளிலிருந்த விருக்ஷங்களெல்லாம் கொஞ்ச காலத்துக்குள் கப்பல் வேலை உபயோகத்துக்காக வெட்டப்பட்டுப் போய்விட்டன. அதன் பேரில் கவர்மெண்டார் ஸிவில் ஸெர்விஸைச் சேர்ந்த கனோலி அவர்களின் யோசனையையடைந்து மலையாளத்தில் நிலம்பூரில் தேக்குக்காடுகளை உண்டுபண்ணினார்கள். உலகத்திலேயே நிலம்பூர் காடுகளைப்போல உயர்வான காடுகள் வேறொன்றும் இல்லை. நிலம்பூர் காடுகளின் விஸ்தீர்ணம் வர வர அதிகப்படுத்தப்பட்டும் வருகிறது. நிலம்பூரைத்தவிர இன்னும் பல இடங்களிலும் தேக்குக் காடுகள் உண்டாகின்றன.

ஆதியில் பாரெஸ்டு இலாகா உத்தியோகஸ்தர்கள் பல இதர இலாகாக்களிலிருந்து நியமிக்கப்பட்டார்கள். முதல் முதலான சென்னை சீப் கன்ஸர்வேடர் கிளெக்ஹாரனென்ற ஒரு டாக்டர். அந்தக் காலங்களில் பாரெஸ்டுகளில் ரோட்டுகளும் பாதைகளும், தங்குவதற்கு பிரயாணி சாலைகளும் இல்லை. அப்படியிருந்த பொழுதே அவர்கள் வெகு உயர்வான ஊழியத்தைச் செய்திருக்கிறார்கள். ராணுவத்தில் ஸோல்ஜராக விருந்த ஜோகோ வென்ற ஒருவர் நீலகிரியில் காட்டு நிர்மாண ஸம்ரக்ஷண வேலைகளில் நியமிக்கப்பட்டு அவர் கர்னல் ஆகிற வரையில் காட்டு வேலையில் உழைத்தார். 1868ல் டர்ன்புல் என்பவரும் உழைத்தாராம். ஆனால், இவர் சீமைக்குப் போய் ஆராய்ச்சி வேலைகளைச் செய்துவரப் போவதாகச் சொல்லிவிட்டு கவர்மெண்டிலிருந்து 33000 ரூபாய்களை பெற்றுக்கொண்டு போனாராம். போனவரின் தகவல் இன்னும் ஏற்படவில்லையாம்.

1871இல் தான் பாரெஸ்டுப் பயிற்சியை அடைந்த உத்தியோகஸ்தர் ஒருவர் முதல் முதலாக பாரெஸ்டு இலாகாவிற்கு நியமிக்கப்பட்டார். பிரடனில் மழை எங்கும் குறைவில்லாமல் பெய்கிறது. ஆறுகளில் எப்பொழுதும் வெள்ளம் போகிறது. ஆகையால் முன் காலத்தில் ஆங்கிலேயர்கள் காட்டு ஸம்ரக்ஷண விஷயங்களில் கவனத்தைச் செலுத்தினதில்லை. பின்பு, மஹா யுத்தத்திற்குப் பிறகு தான் ஆங்கில தேசத்தில் ஜனங்கள் காட்டு ஸம்ரக்ஷண விஷயங்களைக் கவனிக்கத் தொடங்கினார்கள். தற்போதில் காட்டு வளர்ப்பு அத்தேசத்தில் வெகு ஊக்கத்துடன் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, ஆதியில் காட்டு இலாகாவில் உத்தியோகஸ்தர்களுக்கு காட்டு ஸம்ரக்ஷண விஷயங்களில் சிரத்தையே யில்லாமல் இருந்தது. அவர்கள் காட்டு ஸம்ரக்ஷண விஷயங்களில் ஒரு நோக்கத்தையும் கைப்பற்றவில்லை. காடுகளை யுபயோகிக்கும் ஜனங்களும் அவைகள் பிற்காலங்களில் தங்களுடைய பின்வாரிசுகளுக்கும் உபயோகிக்கப்பட வேண்டுமென்கிற விஷயத்தைக் கவனியாமல் காடுகளைத் தங்களுடைய இஷ்டம்போல் வெட்டி வந்தார்கள்.

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சேர்ந்து, பாரெஸ்டு வசூலானது வருஷம் ஒன்றுக்கு 45 இலக்ஷ ரூபாயாகத்தேற்கிறது. இதில் இலாபமாக ஏற்படுகிறது 20 இலக்ஷ ரூபாய். சென்ற 50 வருடங்களின் மொத்த இலாபம் 2½ கோடி ரூபாய் இலாபம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1919-20 இல் 25½ இலக்ஷ ரூபாய், இலாபமாகத் தேறியது. சென்ற இரண்டு வருஷங்களில் சற்றேறக்குறைய வருஷம் ஒன்றுக்கு 15 இலக்ஷங்களாக தேறியிருக்கிறது. ஆகவே, ஆரம்பத்தில் ஏற்பட்ட இலாபத்தைப்போல் 50 மடங்கு இலாபம் இப்பொழுது கிடைக்கிறது. உலகத்தில் கட்டிட வேலைக்கும் மற்ற வேலைகளுக்கும் வேண்டிய மரங்களின் மொத்த அளவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. காகிதத் தொழிலுக்கு அதிகமாக மெதுவான மரங்கள் வேண்டியிருக்கின்றன. சீக்கிரத்தில் உலகத்தின் மெது மரங்களைக் கொடுக்கக்கூடிய விருக்ஷங்களே அற்றுப்போய்விடும் போல் காண்கிறது. மேலும், ஜனங்களின் நாகரீகம் மேல்மேலும் உயர்வதால் இதர வகை விருக்ஷங்கள்கூட வீடுகட்டுவதற்காகவும், மரவேலைக்காகவும் மேல்மேலும் அதிகமாக உபயோகிக்கப்பட வேண்டியிருக்கும்.

பாரெஸ்டுகளைச் சரியாகப் பாதுகாக்க வேண்டிய கடமை பாரெஸ்டர்களையும் பொறுத்திருக்கிறது. தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட காடுகளிலிருந்து ஜனங்கள் தக்கவாறு சௌகரியங்களை யடையவேண்டுமென்பதையும், காடுகள் அவ்வகையில் பிற்காலத்தில் அழிந்து போகாமல் எக்காலத்துக்கும் அவ்வாறே உபயோகிக்கப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் கவனிக்க வேண்டும். காடென்பது மூலதனத்தைப் போன்றது,

அதன் விருக்ஷங்களில் ஒருவருஷத்தில் ஏற்படும் கிளை, தழை, மாசூல்கள் மூலதனத்தின் வட்டியைப் போன்றவை ஆகவே, ஜனங்கள் வெட்டியாகிற கிளை, தழை மாசூல்களை மாத்திரம் உபயோகிக்கலாமேயொழிய விருக்ஷங்களையே அடியோடே வெட்டிவிடக்கூடாது. காட்டைப்பாதுகாக்க வேண்டிய உத்தியோகஸ்தன் தன்னுடைய காடுகளின் விருக்ஷவகைசங்கியை முதலியவைகளைப் பற்றின விவரங்களை நன்றாய் அறிந்திருக்கவேண்டும். அவன் ஒவ்வொருவகையின் வளர்ச்சி ஞானத்தையும், தக்க உற்பத்தி ஏற்படவேண்டிய வகையில் ஞானத்தையும், மாசூல்களை தக்கவிலைக்கு விற்கவேண்டியவகையில் ஞானத்தையும் உடைத்தாயிருக்கவேண்டும். இவ்வித ஞானங்களையுடைய சிப்பந்திகள் கவர்மெண்டாருக்குச் சிலவருடங்களுக்கு முன்புதான் கிடைத்தார்கள். தேக்கு, சந்தனம், கருங்காலி முதலிய உயர்வு வகை விருக்ஷங்களைப் பிரபலமாக வளர்க்கவேண்டியவகையில் ஆராய்ச்சிகளும் இப்பொழுது தான் சரிவர கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தன மரங்களிலிருந்தே நமது மாஹாணத்திற்கு பிரதி வருஷமும் 10 இலக்ஷரூபாய் வரும்படி வருகிறது. நமது மாஹாணக் காடுகள் ரெயில்வேக்களுக்கு ஸ்லீபர்களையும் கொடுக்கின்றன. சுமார் 6½ கோடி ஸ்லீபர்கள் சென்னைக் காடுகளால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

காடுகள் வெகுசாய் மலைகளின்மீதும் பயிர்செய்வதற்கு உதவக்கூடாத நிலங்களிலும் இருக்கின்றன. ஆகலால் காடுவளர்ப்புச் சிலவு அதிகமாகிறது. மேலும், ரெயில்வே சௌகரியமும் ரஸ்தா, பாதை சௌகரியங்களும் குறைவாயிருக்கின்றன. நம்முடைய மாஹாணத்தில் உற்பத்தியாகும் தேக்கு பர்மாதேசத்திய தேக்கைக்காட்டிலும் மேன்மையானது. ஆனால் மேற்கூறிய சௌகரியக் குறைவுகளிருப்பதால் பர்மியதேக்கானது அதிகமாக நம்முடைய மாஹாணத்துக்கு வரவழைக்கப்பட்டு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. நம்முடைய மாஹாணத்திற்குப் பிரதிவருஷமும் வரவழைக்கப்படும் பர்மிய தேக்கின் கிரயம் சுமார் 80 இலக்ஷரூபாயாகிறது. மேலும், நம்முடைய தேசத்தில் சாதாரணவேலைக்கு வேண்டிய மரங்கள் ஏராளமாய் உற்பத்தியாகின்றன. அப்படியிருந்தும், நமது மாஹாணத்தவர்கள் எல்லா வேலைகளுக்குமே தேக்கையே உபயோகிக்கிறார்கள். பர்மா தேசத்தில் சீனத்தச்சர்கள் சாதாரண வேலைகளுக்கு எல்லாவித காட்டுமரங்களையும் ஒழுங்குபண்ணி உபயோகிக்கிறார்கள், ஆகவே 2 ரூபாய்விலைக்கு பெஞ்சுகள் பீரோக்கள் முதலியவைகள் அத்தேசத்தில் கிடைக்கின்றன.

காடுகளிலிருந்து தச்சுவேலைக்கு வேண்டிய மரங்கள் உற்பத்தியாவதோடு அவைகளிலிருந்து வியவஸாயிகளுக்கு வேண்டிய கருவிகளுக்காக வேண்டியமரங்களும், விறகும், எருத்தழைகளும் உண்டாகின்றன. அவை



கள் மாடுகளுக்கு மேய்ச்சல் பூமிகளாகவு மிருக்கின்றன. மேற்கூறிய சௌகரியங்களைக் கட்டாயமாக வியவஸாயிகள் அடைய வேண்டியிருப்பதால் காடுகள் அச்சௌகரியங்களை மேல்மேலும் உடைத்தாயிருக்கும்படி முயற்சிகள் கைக்கொள்ளப்பட வேண்டும்.

காடுகளில் அரக்கு, பிசின்கள், பிரம்பு வகைகள், தோல்களைப் பதம் செய்வதற்கு வேண்டிய பட்டைகள், பலவிதப் பழங்கள், இவைகளெல்லாமும் உற்பத்தியாகின்றன. அரக்கு அநேகப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது, அதிலிருந்து கவர்மெண்டுக்கு நல்ல வரும்படியும் ஏற்படுகிறது. காடுகள் ஒவ்வொன்றிலும் பலவகை மரங்களுமிருப்பதாலும் அவைகளுக்குப் போவதற்குத்தக்க பாட்டைகளும் ரோட்டுகளும், ரெயில்வேக்களும் இல்லாமையாலும் அநேக தொழில்கள் நம்முடைய மாஹாணத்தில் நன்றாய் நடத்தப்படக் கூடுகிறதில்லை. நம்முடைய மாஹாணத்திய மூங்கிலும் பர்மா தேசத்து மூங்கிலும் காகிதத்தொழிலுக்குச் சிறந்தவையென்று மதிக்கப்படுகின்றன. நமது மாஹாணத்தில் காகிதத் தொழில் ஸ்தாபனமொன்று ஏற்படப்போகிறதாம்.

காடுகளில்லா விட்டால் தேசங்களே அழிந்து போகின்றன. உஷ்ண தேசங்களில் காடுகள் அதிகமாக விருக்க வேண்டும். மஹா அலெக்ஸாந்தர் 2000 வருஷங்களுக்கு முன் நமது தேசத்துக்குப் படையெடுத்து வந்த போது அவர் சிந்து மாஹாணம் காடுகள் நிறைந்த தேசமாகவும் அதில் பயிர்கள் சம்ருத்தமாகவு மிருந்ததாகவும் கவனித்தாராம். இப்பொழுது சிந்து மாஹாணம் வறண்டதாக இருக்கிறது. தற்காலத்தில் கூட இந்தியாவிலுள்ள பல வறண்டப் பிரதேசங்கள் காடுகள், பயிர் பூமிகள், வற்றாத ஆறுகள் நிறைந்தவைகளாக விருந்தனவென்று பாரதம் கூறுகிறது. ஐக்கிய மாஹாணங்களில் பேபர் சக்கிரவர்த்தி கல்லைகளை வேட்டையாடினாராம். ஆசியாமைனரில் இப்பொழுது வறண்டாங்களாக விருக்கிற இடங்களிலெல்லாம் முற்காலத்தில் இருந்த காடுகளின் அடையாளங்களும் நீர்பாசன வாய்க்கால்க் கட்டிடங்களின் அடையாளங்களும் காணப்படுகின்றனவாம். வறண்டதாக விருக்கிற டிரிபோலி முன் காலத்தில் தோப்புத்துறவுகளோடிருந்ததாகத் தெரியவருகிறது.

தேசங்களில் காடுகள் நிறைந்திருந்தால் அவைகளிலுள்ள ஆறுகளில் வெள்ளம் ஓடிப்போய்விடாது, முகத்துவாரங்களில் மண்மேடுகள் ஏற்படா. நீர் ஆறுகளில் நிற்கும். காடுகள் அழிக்கப்பட்டதால்தான் கோதாவரியைப் போன்ற நதிகளின் முகத்துவாரங்களில் மண்மேடுகள் அதிகமாகக் கிளம்பியிருக்கின்றன. அநேக நதிகளில் முற்காலத்தில் மரங்கள் பல தூரஸ்தலங்களுக்கு மிதக்கவிட்டு அனுப்பப்பட்டனவாம். அவ்வித நதிகள் தற்காலத்

தில் உடனுக்குடனே வற்றிப்போய் விடுகின்றன. நம்முடைய மாஹாண காடுகள் நமது மாஹாணத்திலுள்ள 70 இலக்ஷம் ஏக்ராப்பயிர் பூமிகளை சம்ரக்ஷிக்கின்றன. ஆறுகளிலும், பாசனத்தேக்கங்களிலும் நீர் வற்றாமலிருக்கும்படிச் செய்கிற ஒரு ஊழியமே காடுகளின் ஊழியங்களுள் வெகுசிறந்தது.

## வர்த்தமானக் குறிப்பு.

பொங்கலோ பொங்கல். இவ்வார்த்தைகளுடன் நாம் நமது பாரெஸ்ட் பஞ்சாயத்தார்களுக்கு க்ஷேமத்தையும், ஆரோக்கியத்தையும் ஐசுவரியத்தையும் கடவுள் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம். நமது இயக்கம் மேல்மேலும் வலுத்து நமது மாஹாணத்தின் க்ஷேமநிலையும் செல்வநிலையும் உயரவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம். பஞ்சாயத்தார்கள் பஞ்சாயத்தியக்கத்திலும், அதை உயர்த்தவேண்டிய நிமித்தம் வேலைசெய்கிற அவர்களின் பத்திரிகையாகிய "ரூரல் இந்தியா" பத்திரிகையின் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் ஊக்கத்தை வஹிக்கவேண்டும் என்றும் வணக்கமாக பன்முறை கேட்டுக் கொள்வோம். வெகு பஞ்சாயத்துகள் இன்னமும் சந்தா பாக்கிகளைச் செலுத்தாமலிருக்கின்றன வாதலால் பத்திரிகை வேலைக்கும் பணக்கஷ்டம் ஏற்பட்டு வருகிறதென்று ஓயாமல் கூறிவருகிறோம். பத்திரிகையின் 6-வது மலர் முன்சஞ்சிகையிலிருந்து தொடங்கிவிட்டது. இனியாவது பஞ்சாயத்தார்கள் சந்தாபாக்கிகளை தாமதமில்லாமல் உடனே செலுத்தி தங்களுடைய கடமையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோறுவோம்.

x x x x

வில்லிங்குடன் பிரபு. நமக்கு இராஜப் பிரதிநிதியாக வரப்போகிற வில்லிங்குடன் பிரபுவிற்கு வணக்கமான நன்வரவையளிக்கிறோம். வில்லிங்குடன் பிரபு ஏற்கனவே நமது மாஹாணத்திற்கும் பொம்பாயிக்கும் கவர்னராக விருந்து கீர்த்தி பெற்றவர். தற்சமயத்தில் நமது தேசத்திற்கு அவரைப் போன்ற நிர்வாஹ சக்தியுள்ள தீர்க்கதரிசனமுள்ள ஒருவர் இராஜப்பிரதிநிதியாக நியமிக்க வேண்டியது வெகு அவசியமானது. ரிபன் பிரபுவைப் போலவே நமது தேசத்தின் க்ஷேமத்திற்கும், அபிவிருத்திக்கும் வெகு அன்போடு பாடுபட்டு நன்மைகளை ஏற்படுத்தி என்றைக்கும் நமது ஜனங்கள் நன்றி பாராட்டும்படியான நிலையில் நமது தேசத்தை யமைத்துவிட்டு உத்தி



யோகத்திலிருந்து நீங்கப்போகிற சிறப்பு வாய்ந்த இர்வின் பிரபுவிற்கு வில்லிங்குடன் பிரபுவே சரியான பதவியாவர்.

x x x x

காட்பாடியில் அமெரிகன் ஆர்காட் மிஷனுனது கிராமாபி முயர்ச்சிகளைச் செய்து வருகிறது. பிரதம மந்திரியாகிய கனம். முனிசாமி நாயுடு காரு அதன் வியவஸாய ஸ்தாபனத்தின் திறப்பு விழாவை நடத்தினார். இந்த ஸ்தாபனத்தில் கோழி வளர்ப்பு முயர்ச்சிகள் அநுஷ்டிக்கப்படுகின்றன. சிறந்த ஜாதி கோழிகள் பல தேசங்களிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன. நமது நண்பராகிய ஸ்ரீமான் பி. எம். கோபாலகிருஷ்ணன் அந்த ஸ்தாபனத்தில் தலைமை வஹித்து அதை நடத்துகிறார். ஸ்ரீமான் கோபால கிருஷ்ணன் அவர்கள் நமது சிறந்த தேச ஊழியர்களில் ஒருவரென்று நாம் கூறவேண்டியது அவசியமில்லை. குடிசைத் தொழில்களில் கோழி வளர்ப்பானது நமது கிராம ஜனங்கள் அவசியமாகக் கைக்கொள்ள வேண்டியவைகளிலொன்று. ஏற்கனவே, முன்னொரு சஞ்சிகையில் கோயம்புத்தூரில் இராமனாதபுரத்தில் ஒய். எம். ஸி. ஏ. ஸ்தாபனத்தில் நடத்தப்படும் கோழி அபிவிருத்தி முயர்ச்சிகளைப்பற்றியும் அதில் கோழி நோயாளிகளுக்கு அமைக்கப்பட்டிருக்கும் வைத்திய சாலையைப்பற்றியும் விவரமாய் எழுதியிருக்கிறோம். கிறிஸ்தவ மிஷனார் நமது கிராம ஜனங்களின் அபிவிருத்தி நிமித்தமாக வெகு உயர்வான முயர்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். நமது தேசத்து ஸ்தாபனங்களில் ஒன்று கூட இவ்விதப் புண்ணிய ஊழியங்களை இன்னமும் கைக்கொள்ளவில்லை. இனியாவது அவைகள் இவ்வித முயர்ச்சிகளைக் கைக்கொள்வார்களா?

## வேர்க்கடலை வியாபாரம்.

நமது மாஹாணத்தில் வேர்க்கடலையைப்பயிர் செய்வோர்களுக்கு சிலவருஷங்களாக பெரிய நஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன. மழை அதிகமாகப் பெய்ததாலும் இன்னும் சிலகாரணங்களாலும் காய்ப்பு குறைந்துபோயிற்று அறுவடையும் சரிவர நடத்தப் படக்கூடவில்லை. விலையும் மலிந்துபோய்விட்டது. சென்றவருஷத்தில் காய்கள் 1 ரூபாயிக்கு 5 பட்டணம்படிகளாக விருந்தது, இவ்வருஷத்திலோ விலையானது 1 ரூபாயிக்கு 30, 40 படிகளாக இறங்கிவிட்டது. நெல்பயிரில் நாத்து நடவேண்டிய காலமும் வேர்க்கடலையை அறுவடைசெய்ய வேண்டியகாலமும் ஒன்றாயிருக்கிறது. வேர்கடலை

யின் விலை முன்காலத்தில் அதிகமாக விருந்தபடியால் பயிருழியர்கள் அப்பயிரின் அறுவடை வேலையில் அதிகமாக அமர்ந்து ஆளொருவருக்கு ஒருமாக்கால் வீதம் கூலியை அடைந்தார்கள். இந்த ஒருமரக்கால் கடலையை அவர்கள் கிராமத்திலேயே 5 அணுவுக்கு விற்றுவிடுவார்கள். அந்த ஒருமரக்கால் கடலைக்கு இப்பொழுது ½ அணு அகப்படுவதே கஷ்டமாகிவிட்டது. ஆகவே கடலையறுவடைசெய்த கூலியாட்கள் இப்பொழுது நெல்பயிரில் வேலை செய்யத்தொடங்கி யிருக்கிறார்கள். நெல்பயிரில் வேலைசெய்வதில் அவர்களுக்கு நபர் ஒருவருக்கு 2 அணுவீதம் கூலி அகப்படுகிறது. ஆகவே, வேர்க்கடலை பயிர்கள் வெகு இடங்களில் அறுவடைக்குக் கூலியாட்கள் அகபடாமையால் அறுவடையாகாமலே போய்விடுகின்றன. கிராமங்களில் ஜனங்கள் வேர்க்கடலை மாசூலை விற்றுதான் சர்க்கார் அஸெஸ்மெண்டைக் கட்டுவார்கள், தங்களுடைய பொங்கல்ச் செலவு முதலியவைகளை செய்துகொள்வார்கள். வேர்க்கடலைக்கு இப்படிப்பட்ட ஆபத்துக்கள் வந்தால் அவர்கள் அச்செலவுகளுக்கு எங்கேயிருந்து பணத்தை எதிர்ப்பார்பார்கள்? தற்போதில் வேர்க்கடலை வியாபாரம் வெகுகஷ்டநிலையி லிருக்கிறது. அது முன்போல் ஏற்படுமோ ஏற்படாதோ. ஏன் அது அப்படியாகியிருக்கிறதோ தெரியவில்லை. ஒருக்கால் அந்நிய நாடுகளில் வேர்க்கடலையுற்பத்தி விபரீதமாகியிருக்கிறதோ அல்லது மேனாட்டில் நமதுதேசத்திய வேர்க்கடலையை தொழில்க்காரர்கள் முன்போல் வேண்டுகிறதில்லையோ. அரிசிக்குவந்த கேட்டைப்போலவே இதற்கும் கேடுவந்திருக்கலாம். கவர்மெண்டார் இவ்விஷயத்தைப்பற்றி ஒரு விசாரணைக் கம்மிட்டியை நியமித்து விசாரிக்க வேண்டுமென்று வணக்கமாய்ச் சொல்வோம். அரிசி, கோதுமை, வேர்க்கடலை இவைகளுக்கு மாத்திரம் விலைகள் இறங்கியிருக்கின்றன வென்பதில்லை, எல்லாவிதப் பயிர் மாசூல்களுக்கும் விலைகள் இறங்கிவிட்டன. ஆதலால் கவர்மெண்டார் முன்னே விதித்த வரிகளைக் குறைக்க வேண்டும். இப்பொழுதுள்ள அஸெஸ்மெண்டுகள் அதிக விலைகள் இருந்த காலத்தை யுத்தேசித்து விதிக்கப்பட்டனவாதலால் அவைகள் தற்போதிய நிலையின்படி குறைக்கப்பட வேண்டும் என்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்வோம்.

இது சம்பந்தமாக சில யோசனைகளைக் கவர்மெண்டாருக்குச் சொல்லவும் நாம் துணிகிறோம். கவர்மெண்டார் அதிக உற்பத்தி ஏற்பட வேண்டுமென்று மாத்திரம் வியவஸாய இலாகாவையும் வியவஸாய ஆராய்ச்சி சபையையும் ஸ்தாபனங்களையும் உண்டாக்கி யிருக்கிறார்கள். இதோடு அவர்கள் வியவஸாய உற்பத்திகளுக்குத் தக்க மார்க்கெட்டுகளைக் கண்டுபிடித்து வியவஸாயிகளுக்கு நல்ல இலாபங்களை யுண்டுபண்ண வேண்டிய நிமித்தம் முயர்ச்சிகளைச் செய்ய வேண்டும். மேனாட்டினர் தங்களுடைய தேசத்திய உற்பத்திகள் அந்நிய நாடுகளில் தக்கபடி வியாபாரமாக வேண்டிய நிமித்தம் பலவித



முயர்ச்சிகளைக் கைக்கொண்டு வருகிறார்கள். மார்க்கெட் ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று நம்முடைய தேசத்தில் ஏற்பட்டால் அது வியவஸாயிகளுக்கு மாசூல்களை விலைப்படுத்த வேண்டிய வழிகளில் சிறந்த யோசனைகளைச் சொல்லக் கூடும். நமது மாஹாண கவர்மெண்டார் மேற்சொல்லிய யோசனையைக் கவனிப்பார்களாக.


## The Magazine Press Limited, Chingleput.

**Printers to the Forest Panchayatdar's Union Limited, Madras:**

பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய புத்தகங்கள் நம்மிடம் நிர்ணயிக்கண்ட விலைக்கு எப்பொழுதும் கிடைக்கும் :—

தபால் மூலம் வேண்டுவோர் தபால் செலவையும் சேர்த்து முன்பாக மணியாடர் செய்தால் தபாலில் அனுப்பமுடியும் வி. பி. கிடையாது

| | | | விலை | | | தபால் செலவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | குற்ற ரிபோர்ட்டு | 200 பக்கம் | 2 | 0 | 0 | 0 | 6 | 0 |
| 2. | கால் நடை பாஸ் | 100 ... | 1 | 0 | 0 | 0 | 3 | 0 |
| 3. | தழை பாஸ் | 100 ... | 0 | 12 | 0 | 0 | 3 | 0 |
| 4. | குண்டுக்கல் வகைரு பாஸ் | 100 ... | 0 | 12 | 0 | 0 | 3 | 0 |
| 5. | மதாந்தர ரிபோர்டு | 50 Forms | 0 | 8 | 0 | 0 | 3 | 0 |

எந்த புஸ்தகங்கள் வேண்டுமோ, அவைகளின் விலையையும் தபால் செலவையும் சேர்த்து மணியார்டர் அனுப்பினுல், புஸ்தகங்கள் உடனே தபால் பார்ஸலில் அனுப்பப்படும்.

மானேஜர் : மாகஸீன் அச்சுக்கூடம் லிமிடெட், செங்கல்பட்டு.

# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

**—ADHYAKHA—**

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப் படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பப்பை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.

# பஞ்சாயத்து வஸபிரெஸிகளுக்கு முக்கியமான நவீன முறை புஸ்தகங்கள்!

## விவசாயம்.

இந்தியாவில் விவசாய சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட ராஜாங்க கமிஷன் ரிபோர்ட்டின் சுருக்கம் ரூ. 1-8.

## கிராம விஷயங்கள்.

இந்திய கிராம ஜீவனோபாய முறை—எஸ். கேசவய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதிய புஸ்தகத்தின் தமிழ் மொழிப் பெயர்ப்பு 1930 ரூ. 5.

கிராம பஞ்சாயத்துகள்--முனிஸாமி அய்யரால் 1930 ரூ. 2.

இந்திய கிராமத்தில் ஓர் புத்திமான் (Socrates in an Indian Village)—பிரைனல். 1930. ரூ. 1-8.

## கூட்டுறவு

கூட்டுறவு முதல் நூல்—காஜியால் 1929. அணா 8.

கூட்டுறவு கிராம சங்கம், ஓர் நாடகம் ராஜகோபாலய்யரால் 1929. அணா 8.

மாக்கலகான் கமிட்டி ரிபோர்ட் 12 அணா.

## வியாபாரம்.

| | |
|---|---|
| வியாபார தந்திரம் | ரூ. 1-8 |
| வர்த்தக யுக்தி | 12 அணா |
| வர்த்தக யூகம் | 8 அணா |

ஹென்ரீ போர்டு அல்லது வெற்றியின் ரகசியம்—பூலோகத்தில் மோட்டார் வியாபாரத்தில் விசேஷமான வெற்றியடைந்த ஒரு அமெரிக்கரின் விநோத சரித்திரம் ரூ. 1-8.

## புக்கீப்பிங்.

வர்த்தக கணித நூல் அல்லது தமிழ் புக்கீப்பிங். ரூ. 2.

## கைத்தொழில்.

கைத்தொழில் முறைகள்—1000 கைத்தொழில் முறைகளடங்கிய அருமையான நூல் ரூ. 1-8.

டெய்லரிங் அண்டு கட்டிங் ரூ 1.

## இந்தியா.

இந்திய மாதா—ஒுரு அமெரிக்கப் பெண் எழுதிய "Mother India" வின் தமிழ் மொழிப் பெயர்ப்பு ரூ. 1-8.

இந்திய பிதா—மேல்கண்ட இந்திய மாதாவுக்கு பதில் உத்திரமாக வி. எஸ். ரங்கய்யர் எழுதிய "Father India" வின் மொழிப் பெயர்ப்பு ரூ. 2.

துரதிர்ஷ்ட இந்தியா—மேல்கண்ட இந்திய மாதாவுக்கு பதில் உத்திரமாக லாலா லஜபதிராய் எழுதிய "Unhappy India" வின் மொழிபெயர்ப்பு ரூ. 2-8.

அமெரிக்கா—வின் தற்கால முன்னிலையை எப்படி அடைந்தது என்பதை லாலா லஜபதிராய் எழு்யது ரூ. 2.

மேயோவுக்கு சவுக்கடி ரூ. 2.

## மோட்டார்.

மோட்டார் டிரைவிர்ஸ் மானுயல் ரூ 3-8.

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சி முறையும் ரூ. 1-8.

## ஆங்கிலம்.

ஆனந்த ஆங்கில பாஷா போதினி ரூ. 2.

ஆங்கில ஆசான் ரூ. 2.

ஆங்கில ஆசிரியன் ரூ. 1.

ஆங்கில போதகன் ரூ. 2.

உங்கள் விலாஸம் தெரிவித்தால் எங்கள் புஸ்தக காட்லாக் அனுப்புகிறோம்.

**ஸிடிபுக் கம்பனி, தபால் பெட்டி 283, மதராஸ்.**

**The City Book Co.,-Post Box 283, Madras.**